# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

## அசல் வழக்கு எண் 406/2012 உடன் இணைந்த 53/2010

பெயர் : அர்சுணன் நாள் : 08.02.2023

வா.சா.3 – 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.3 – அர்சுணன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.51</u>

நான் பாட்டாளி மக்கள் கட்சியில் ஒரு முக்கிய பிரமுகர் என்றால், சரிதான். நான் கட்ட பஞ்சாயத்து, அடி தடி வேலைகள் செய்து வருகிறேன் என்றால், சரியல்ல. ஒரு மாதத்திற்கு முன்பாக நடேசன் என்பவர் சாட்சியம் சொல்ல அழைத்தார். அதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்ல சொல்ல தட்டச்சு செய்யப்பட்டது. நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. நான் குடியிருக்கும் இடத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சுமார் 200 அடி தூரம் இருக்கும். சேலத்திலிருந்து பவானி செல்லும் சாலையிலிருந்து வழக்கு சொத்து சுமார் 100 அடி தூரத்தில் உள்ளது. நான் வழக்கு சொத்திற்கு தெற்கில் உள்ளேன். சேலம் மெயின் ரோட்டிலிருந்து சுமார் 200 அடி தள்ளி நான் குடியிருந்து வருகிறேன். நடேசன் அசல் வழக்கை நடத்துவதற்கு சுரேஷ் என்ற அதிகார முகவரை நியமித்துள்ளார். சுரேஷின் அக்காவின் கணவர் சேலம் மெயின் ரோட்டில் வாரி தாபா என்ற கடையை நடத்தி வருகிறார் என்றால், சரிதான். சுரேஷின் அக்கா கணவர் ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்த வருகிறார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது.

2) நான் சொந்தமான பட்டறை வைத்து மெக்கானிக் தொழில் செய்து வந்தேன். எனது வீட்டிற்கு செல்லும் பாதைக்கு நேர் எதிரே மெக்கானிக் தொழில் செய்த வந்தேன். நான் தற்போது டெம்போ எண் TN 30 U 8779 என்ற வாகனத்தை ஓட்டி வருகிறேன். அதன் பதிவு சான்று ராஜேந்திரன் என்பவர் பெயரில் உள்ளது. அவர் கோழிஞ்சிகாட்டில் குடியிருந்து வருகிறார். வாதி நடேசன் ஜம்புலிங்கத்துடன் பிறந்தவர்கள் 4 நபர்கள் ஆவார்கள். அந்த 4 நபர்களையும் எனக்கு தெரியும். நடேசன், ராமசாமியை தவிர மற்ற நபர்களின் பெயர் தெரியாது, அவர்கள் எங்கு

குடியிருக்கிறார்கள் என்ற விபரமும் தெரியாது. அதனால் அவர்களுடைய குடும்பத்தை தெரியும் என்று இந்த வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால், சரியல்ல. ஜம்புலிங்கத்திற்கு 4 நபர்களை தவிர மற்ற உடன் பிறந்தவர்களும் உள்ளார்கள் என்று சொன்னால், எனக்கு 4 நபர்களை மட்டுந்தான் தெரியும். நடேசன் ஜம்புலிங்கம் எத்தனை வருடங்களாக அமெரிக்காவில் பணிபுரிந்து வருகிறார் என்றால், ராமசாமி என்னுடைய பட்டறைக்கு வருவார், அவரை பார்ப்பதற்காக நடேசன் வருவார் அந்த வகையில்தான் எனக்கு நடேசனை தெரியும். என்னை பார்ப்பதற்கு முன்பாக எத்தனை நாட்களாக நடேசன் இந்தியாவில் இருந்தார் என்று சொன்னால், ராமசாமி இருந்தபோது வந்ததுதான் தெரியும், அதற்கு முன்பு நான் அவரை பார்க்கவில்லை. நான் நடேசன் அமெரிக்காவில்தான் வேலையில் இருந்த வருகிறார் என்பதை கேட்டு தெரிந்து கொண்டேன். 1992 ல் கிரையம் வாங்கிய விபரம் எப்போது தெரியும் என்றால், பட்டறைக்கு வந்து செல்லும்போது எனக்கு தெரியும். இடம் வாங்கியுள்ளதாக சுமார் 25 வருடங்களுக்கு முன்பாக சொன்னார். வேறு என்ன கூறினார் என்றால், ராமசாமி என்பவர் நானும் தம்பியும் பாதி பாதி இடம் வாங்கியதாக கூறினார்.

3) 1992 ல் கிரையம் வாங்கிய விபரம் ராமசாமி சொல்லிதான் தெரியும். நேரில் தெரியாது. வீட்டு திறப்பு விழாவிற்கு சென்று வந்தேனா என்றால், 2, 3 முறை வீடு கட்டப்பட்டது, 2, 3 முறை சென்று வந்துள்ளேன். வழக்கு சொத்தில் 2 வீடுகள் உள்ளது. தனித்தனியாக 2 வீடு உள்ளது என்றால், சரியல்ல. 2 வீடும் ஒன்றாகத்தான் சேர்ந்துள்ளது. வடக்கே ஒருவரும், தெற்கு ஒருவரும் உள்ளாரா என்றால், வடக்கு பார்த்தவாறே 2 வீடும் உள்ளது. நான் முதன்மை சாட்சியத்தில் வடக்கு பக்கம் ராமசாமிக்கும், தெற்கு பக்கம் நடேசனுக்கும் வீடு உள்ளது என்று பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. ஒரே வீடுதான் உள்ளது, வாசற்படி 2 உள்ளது. வடக்கு பக்கத்தில் ஒரே ஒரு வாசல்தான் உள்ளது. மாரிமுத்தான்காடு குப்பனூர் பைபாஸை தாண்டி உள்ளது. மாரிமுத்தான்காடுதான் வாதியின் பூர்வீகம் ஆகும். எவ்வளவு நிலம் உள்ளது என்று எனக்கு தெரியாது. மாரிமுத்தான்காட்டிலும் வாதிக்கு தனியாக வீடு உள்ளது. மாரிமுத்தான்காட்டில் உள்ள நிலங்களை வாதி, பிரதிவாதிகள் தனித்தனியாக பிரித்துக்கொண்டார்கள் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது.

4) நடேசன் அமெரிக்காவில் இருந்து வருடத்திற்கு 1 அல்லது 2 முறை வருவார். அவர் இந்தியாவிற்கு வந்தால் எத்தனை நாட்கள் தங்குவார் என்ற விபரம்

எனக்கு தெரியாது, கூப்பிட்டால் சென்று வருவேன். தெற்கு பக்கம் வாசற்படி உள்ளதா என்றால், முன்பு இருந்தது தற்போது இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. நான் தெற்கு திசையில் உள்ள வாசலை எத்தனை வருடங்களுக்கு முன்பாக பார்த்தேன் என்றால், நான் வீடு கட்டும்போது பார்த்தேன், அதன் பின் பார்க்கவில்லை. நான் அவர் இந்தியா வரும்போதெல்லாம் அவருடைய அண்ணன் கூப்பிடும்போது பார்த்துவிட்டு வருகிறேன். நான் வைத்திருந்த பட்டறையின் பெயர் சரஸ்வதி பட்டறை என்றால், சரிதான். ராமசாமியை எனக்கு தெரியும். ராமசாமி சொத்தின்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியும். எத்தனை வருடங்களுக்கு முன்பாக வழக்கு தாக்கல் செய்தார் என்பது எனக்கு தெரியாது. நடேசன் என்பவர் வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும். நடேசன் எந்த வருடம், எதற்காக வழக்கு தாக்கல் செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. ராமசாமி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக நானும், சுரேஷும், சுரேஷின் மாமா ஆகியோர்கள் அடியாட்களுடன் சேர்ந்து வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்தோம் என்றால், சரியல்ல. என்னுடைய அரசியல் பின்புலத்தை பயன்படுத்திதான் அத்துமீறி நுழைந்தார்கள் என்றாலும், அதுசம்பந்தமாக வழக்கு பதியப்பட்டது என்றாலும், சரியல்ல.

5) நான் குற்ற செயல்கள் செய்யக்கூடிய பின்னணி கொண்டவர் என்று சொன்னால், சரியல்ல. நானும், முகவரும் கட்ட பஞ்சாயத்து செய்யும் வழக்கம் கொண்டவர்கள் என்று சொன்னால், சரியல்ல. நான் முதன்மை சாட்சியத்தில் நடேசன் வழக்கு சொத்து பக்கமாக 10 வருடங்களாக போகவில்லை என்று பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. நடேசன் 10 வருடங்களுக்கு முன்பாக வழக்கு தாக்கல் செய்துவிட்டார் என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும், சரியல்ல. தெற்கு பக்கம் வில்லை வீடு உள்ளது. தெற்கு பக்க வீட்டிற்கும், வடக்கு பக்க வீட்டிற்கும் இடையே சுவர் உள்ளதா என்றால், பொதுவாகத்தான் உள்ளது. தெற்கு பக்கம் உள்ள வீட்டிற்கு எவ்வாறு செல்வார்கள் என்றால், மெயின் கேட் வழியாகத்தான் செல்வார். அந்த மெயின் கேட் கிழக்கு பக்கம் உள்ளது. நான் முதன்மை சாட்சியத்தில் நடேசன் தெற்கு பக்கம் உள்ள வீட்டிற்கு வந்து செல்வதாக பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. எனக்கு வழக்கை பற்றியோ அல்லது வழக்கு சொத்தைப்பற்றியோ எதுவும் தெரியாது என்று சொன்னாலும், நடேசன், சுரேஷ், சுரேஷின் மாமா ஆகியோர்களின் துர்போதனையால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வழக்கு சொத்து உள்ள வீட்டில்

ராமசாமியின் மனைவி மட்டும் குடியிருந்து வருகிறார். ராமசாமியின் மனைவி வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டுள்ளாரா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. ராமசாமி எப்பொழுது இறந்தார் என்று தெரியாது. எனக்கு ராமசாமியை பற்றியோ அல்லது அவரது குடும்பத்தைப்பற்றியோ ஒன்றும் தெரியாது என்று சொன்னாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும், சரியல்ல. நடேசன் ஜம்புலிங்கம் தெற்குபுற வீட்டில் தங்கியிருந்ததா நான் சாட்சியம் அளித்துள்ளது பொய் என்று சொன்னாலும், அவர் ஒருபோதும் அங்கு தங்கவில்லை என்று சொன்னாலும், சரியல்ல. அவர் எப்போது இந்தியா வந்தாலும் மாரிமுத்தான்காட்டில் உள்ள வீட்டில்தான் தங்குவார் என்றாலும், வழக்கு சொத்தில் உள்ள வீட்டில் ஒருபோதும் தங்கமாட்டார் என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 12.31</u>

ஒப்பம் /அர்சுணன்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.